| அனுப்புதல் | பெறுதல் |
|---|---|
| மாவட்ட ஆட்சித்தலைவர்<br>(வளர்ச்சி)<br>திருவாரூர் | உதவி இயக்குநர்<br>(ஊராட்சிகள்)<br>திருவாரூர் |

ந.க.எண். 5679/2018/அ3(வ), நாள்: 17.09.2020

002821

அய்யா,

**பொருள்:** பணியமைப்பு - மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு – திருவாரூர் மாவட்டம் - திருத்துறைப்பூண்டி வட்டாரம் - வட்டார வளர்ச்சி அலுவலர் - வெங்கடேசன் (திரு).ஆர் என்பவர் 13.07.2018 அன்று பணியிடையே காலமானது – தனியரது வாரிசுதாரர் சந்தோஷ் (திரு) . வெ என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – அரசால் பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிடப்பட்டது – தொடர்பாக

உதவி இயக்குனர் (ஊராட்சிகள்)
18 SEP 2020
மாவட்ட ஆட்சியரகம்.
திருவாரூர்-610 004.

**பார்வை:**
1. திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண். 5679/2018/அ3(வளர்ச்சி), நாள்: 19.09.2019
2. அரசாணை (4ப) எண். 41, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை, நாள்: 21.07.2020

*******

திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து 13.07.2018 அன்று பணியிடையே காலமான திரு. ஆர். வெங்கடேசன் என்பரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு. வெ. சந்தோஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டதனைத் தொடர்ந்து, தனியர் பணியில் சேர்ந்த நாளான 25.09.2019 மு.ப பணிவரன்முறை செய்து பார்வை 2-ல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையினை குறிப்பிட்டு தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை பதிந்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திட கேட்டுக்கொள்கிறேன்.

**இணைப்பு:** பார்வை 2-ல் காணும் அரசாணை

17/9/2020

மாவட்ட ஆட்சியருக்காக,
திருவாரூர்.

17.9.20

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவாரூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான அரசு ஊழியர் திரு.R.வெங்கடேசன் என்பவரின் மகன் திரு.வெ.சந்தோஷ் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (4ப) எண்.41

நாள்: 21.07.2020
சார்வரி, ஆடி, 06
திருவள்ளுவர் ஆண்டு– 2051

படிக்கப்பட்டவை:

1. திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.5679/2018/அ3 (வளர்ச்சி), நாள் 19.09.2019.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.1966/2020/டி2, நாள் 16.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு1) துறை, நாள் 23.01.2020.

*****

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணியில் இருக்கும் போது 13.07.2018 அன்று காலமான திரு.R.வெங்கடேசன் என்பவரின் மகன் திரு.வெ.சந்தோஷ் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருவாரூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 25.09.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.வெ.சந்தோஷ் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 30.08.2018அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 11.08.1998 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 19 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 20 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

..2

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.வெ.சந்தோஷ் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 25.09.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 17.06.2020 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.7481/க்யூ–1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.14817/ஜி2/2020, நாள் 20.06.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருவாரூர் மாவட்டம்.

<u>நகல்:</u>
திரு.வெ.சந்தோஷ் இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருவாரூர் மாவட்டம்.
( வழி: திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மே.கு.ந.க.எண். 5679/2018/அ3 (வளர்ச்சி) மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு)
நாள்: .09.2020 திருவாரூர்

"அரசாணை (4ப) எண்.41, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3)துறை, நாள்: 21.07.2020."

// நகல் சார்பு செய்யப்படுகிறது //

17.9.2020 2/3

மாவட்ட ஆட்சியருக்காக,
திருவாரூர்.

பெறுதல்:

திரு.வெ.சந்தோஷ்,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊரட்சிகள்),
திருவாரூர் - உரிய வழியாக.

17.9.20

நகல்:

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   திருவாரூர்.
2. இவ்வலுவலக "அ3" இருப்பு கோப்பிற்கு மற்றும் "அ4" பிரிவிற்கு.

ந.க.எண் :2465/2019/அ1 உதவி இயக்குநர் (ஊ) அலுவலகம்
நாள் : .09.2020 திருவாரூர்.

நகல் சார்பு செய்யப்படுகிறது

21.09.20

Assistant Director of
Rural Development (Panchayat)
Collectorate, Tiruvarur.

21/9/2020

பெறுநர் :

திரு.வெ. சந்தோஷ்,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் [ஊ] அலுவலகம்,
திருவாரூர்.